MRCA/F/1/4/1 2019.05.

**செயலாளர்,**
அரசாங்கக் கணக்குகள் குழு,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

**பாராளுமன்ற கூட்டத்தொடர் இலக்கம் : 76**
**நிறுவனத்தின் பெயர் : முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம்**

| **தொடர் இல.** | **நிதிசார் மற்றும் செயலாற்றுகையை மதிப்பீடு செய்யும் போது குழு இனங்கண்டுள்ள குறைபாடுகள் / வழங்கியுள்ள வழிகாட்டல்கள்** | **மேற்படி குறைபாடுகளை சீராக்கல் செய்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் /அமுல்படுத்தப்பட்ட சிபாரிசு/ தற்போதைய நிலைமை** |
|---|---|---|
| 01. | முஸ்லிம் அறக்கட்டளை நிதியத்திற்கு நிதி வழங்கிய சமய வழிபாட்டுத்தலங்கள் பற்றிய தகவல்கள் முறையாக பேணிவரப்படாமை. | குறித்த சமய வழிபாட்டுத்தலகங்கள் பற்றிய தகவல்கள் இணைப்பு A மற்றும் Bஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.<br>குழுவின் சிபாரிசுக்கு அமைய தற்போது அங்கீகரிக்கப்பட்ட முறையியலொன்று தயார் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதாவது நாட்டில் அமைந்துள்ள சகல பதிவு செய்யப்பட்ட இஸ்லாமிய சமய வழிபாட்டுத்தலங்களினதும் தகவல்களை கணினிமயப்படுத்தும் செயன்முறை தற்போது திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு பௌதீக பரிசோதனையொன்றை மேற்கொண்டு உரிய தகவல்களை சேகரிப்பதற்காக திணைக்களத்தினால் |

| | | |
|---|---|---|
| | | பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் திணைக்கள அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுவரை சுமார் 50% ஆன சமய வழிபாட்டுத்தலங்களின் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அவற்றை கணினிமயப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திணைக்களத்தின் இணையத்தளம் ஊடாக இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. |
| 02. | 2015 ஆம் ஆண்டு முஸ்லிம் வழிபாட்டுத்தலங்களுக்கு ரூ.மி. 29 ஆன நிதி உதவி 59 பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், அவை பயன்படுத்தப்பட்டுள்ள முறை பற்றி திணைக்கள மட்டத்தில் பின்னாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டு சமய வழிபாட்டுத்தலங்கள் மற்றும் அஹதியா பாடசாலைகளின் அபிவிருத்திகாக திணைக்களம் வழங்கிய ரூ.மி. 36 ஆன தொகை தொடர்பில் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது சுமார் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மாத்திரமாகும். | 2015 – 2016 ஆம் ஆண்டுகள் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் சமய வழிபாட்டுத்தலங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக திணைக்களம் காசோலை மூலம் நிதியை விடுவித்துள்ளதுடன், இது குறித்த பிரிவின் பிரதேச செயலகம் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் போது குறித்த கருத்திட்டங்களை பூர்த்தி செய்த பின்னர் அதன் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தொடர்பில் தயார் செய்யப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கருத்திட்டத்தின் செலவினங்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்துள்ள பட்டியல்கள் உட்பட சகல ஆவணங்களினதும் சான்றுப்படுத்திய பிரதிகளை திணைக்களத்திற்குப் பெற்றுத் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு அனுப்பியுள்ள ஆவணங்களை கோப்புக்களிலிருந்து கண்டெடுப்பது கடினமாக உள்ளது,<br><br>பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொடுப்பது முறையாக மேற்கொள்ளப்படாமை மற்றும் வேறு நடைமுறைச் சிக்கல்களைக் கவனத்தில் கொண்டு திணைக்களம் 2017 ஆம் ஆண்டு முதல் புதிய வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டு முதல் மேற்படி சமய வழிபாட்டுத்தலங்களுக்கு நேரடியாக நிதி வழங்குவதை நிறுத்தி, அவை அமைந்துள்ள உரிய மாவட்ட செயலகங்களுக்கு **மாத்திரம் நிதி ஏற்பாடுகளை** அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>மாவட்ட செயலகத்தினால் குறித்த நிதியை பிரதேச செயலகங்கள் ஊடாக உரிய சமய வழிபாட்டுத்தலகங்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. எனவே நிதியை வழங்குவது தொடர்பிலான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை எழுவதில்லை என்பதுடன், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச |

| | | |
|---|---|---|
| | | செயலகங்களுடன் நல்லதொரு தொடர்பு பேணிவரப்படுகின்றது. மேலும் மூலதன நிதியைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை ஆராய்வதற்காக ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதிக்கு முன்னர் கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தை உரிய மாதிரிப் படிவங்களுக்கு அமைய பெற்றுக் கொள்வதற்கு பிரதேச செயலாளர்களுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| 03. | ஹஜ் நிதியின் தற்போதைய நிலைமை | ஹஜ் யாத்திரிகையை முறைப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் கணினி ஒன்லையின் நிகழ்ச்சித்திட்டம் ( Online system)அறிமுகம் செய்யப்பட்டது. இஸ்லாமிய பள்ளிவாசல்கள் மற்றும் பத்திரிகைகள் ஊடாக இது பற்றி மக்களை அறிவுறுத்தி, 2018.11.30 ஆம் திகதி முதல் பூரணமாக இந்த முறையின் ஊடாக விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய ஹஜ் யாத்திரிகைக்கு ஒவ்வொருவதும் ஒரு தடவையேனும் பங்கேட்பதற்கான வாய்ப்பு தற்போது செய்துகொடுக்கப்பட்டுள்ளது. |

**எஸ்.எம். மொஹமட்**
செயலாளர்,
தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம்
சமய அலுவல்கள் அமைச்சு

**எம்.ஆர்.எம். மலிக்**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய மற்றும் கலாசார
அலுவல்கள் திணைக்களம்